IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.
DEPOSITION OF WITNESS
(As per XXIII case of Criminal procedure)
SESSIONS CASE NO.70/2020

Deposition of witness for prosecution : PW 1
Defense :

Name : செந்தில்நாதன் என்கிற செந்தில்

Father's Name : காசிரமணி என்கிற ரமணி

Village :

Taluk : ஆரணிபாளையம்

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.09.2022

முதல் விசாரணை

நான் சொந்தமாக டிரேவல்ஸ் வைத்துள்ளேன். சண்டை நடந்தது என்று சொன்னார்கள் யார் யாருக்கு சண்டை நடந்தது என்று எனக்குத் தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

அரசுதரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டுக்கொண்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு அதனை தொடர்ந்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.

போலிசார் விசாரணையில் 11.06.2017 அன்று மெக்கானிக்கடையில் நானும் துளசி என்பவரும் சொந்த வேலையாக பேசிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது சி.எஸ்.ஐ.சர்ச் அருகில் கங்கையம்மன் கோவில் நுழைவு வாயிலில் சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது பன்னீர்செல்வம் மகன் போத் என்கிற மணிகண்டன் சத்தம் போட்டுக்கொண்டிருந்தார் என்றும் அவரை சென்று பார்த்தேன் என்றும் அப்போது பள்ளிக்கூடத் தெருவை சேர்ந்த ஹேமநாதன், லோகேஷ், பாணிப்பூரி கடை வைத்திருக்கும் கோபி டீக்கடை வைத்திருக்கும் ரவி மகன் சுந்தர் மணி தம்பிகுமார் ஆகியோர்கள் மணிகண்டனை துரத்திக்கொண்டிருந்தார்கள்என்றும் அப்போது ஹேமநாதன் கையில் வைத்திருந்த சிறிய பேனா கத்தியால் மணிகண்டனின் இடது கை மணிக்கட்டு இடது பின் பக்க விலா, வலது கை புஜம் ஆகிய இடங்களில் இதோடு செத்து ஒழிந்து போடா என்று திட்டி பேனா கத்தியால் தாக்கினார் என்றும், மற்றவர்கள் கையால் அடித்தார்கள், காலால் உதைத்தார்கள் என்றும் அதை நாங்கள் பார்த்து பிடிக்க ஓடினோம் என்றும் அப்போது

அவர்கள் ஓடிவிட்டார்கள் என்றும் காயம் அடைந்த மணிகண்டனை ஆரணி அரசு மருத்துவமனையில் சேர்த்தோம் என்று சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.